Dr. H. V. HANDE : I did not say ' market value'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு மார்க்கெட் இல்லை என்று சொன்னார்களே, உங்களுக்கு அது மாதிரி போயிருக்கிறதா?

திரு. கே. எம். சுப்பிரமணியம் : அந்த மார்க்கெட்டுக்குள் வரப் போகிறாரா என்ன?

Dr. H.V. HANDE : I did not say market value. I only stated that that expression is very popular. The hon. Members might imagine that it might be due to market value. I do not think there can be any market value at all in politics. We have to be understood by the people and there is no question of market value or not............

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இந்த மன்றத்தில் இருக்கின்ற சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் 4 பேர் அன்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் வந்தார்கள். பின்னால் சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்றிக் கொண்டார்கள். போன வாரம் கோயம்புத்தூரில் கூடி அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து விலகி விட்டதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன பெயரில் சட்ட மன்றத்தில் அழைக்கப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் யாரும் இங்கே இல்லை, நீங்கள்தான் அவர்களுக்காகப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது. பெயர் மாற்றம் சுதந்திரமான ஒன்று தான். டாக்டர் ஹாண்டே அவர்களும் பெயரை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் தகவல் இருந்தால்தான் கொடுக்க முடியும். பத்திரிகையில் பார்ப்பதையோ வெளியில் சலனங்கள் ஒவ்வொரு நாளும் ஏற்படுகிறது என்பதற்கோ சட்ட மன்றம் பொறுப்பாளியல்ல. இப்போது சுதந்திரா பார்ட்டி என்றுதான் இருக்கிறது. புதிய பெயரில் வந்தால் அதைப் பரிசீலிப்போம்.

(3) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ் பின் வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் (Business Advisory Committee) உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.—

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (மாண்புமிகு முதலமைச்சர்).

2. மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் (மாண்புமிகு பேரவை முன்னவர்).

3. மாண்மிகு திரு. செ. மாதவன் (மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்).
4. திரு. பெ. சீனிவாசன் (பேரவைத் துணைத் தலைவர்).
5. திரு. து.ப. அழகமுத்து (அரசு தலைமைக் கொறடா).
6. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
7. திரு. கே.டி.கே. தங்கமணி.
8. திரு. எ.ஆர். பெருமாள்.
9. திருப்பூர் திரு. எ.எம். மொய்தீன்.
10. டாக்டர் எச்.வி. ஹாண்டே.
11. திரு. எ. ஆர். மாரிமுத்து.
12. திரு. இ.எஸ். தியாகராசன்.
13. திரு. நா. காசிராமன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இச்குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப்பேரவையின் 229 (1)-வது விதியின் கீழ் 1972–73-ம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவில் (Rules Committe) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.
2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
3. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
4. திரு. பெ. சீனிவாசன்.
5. திரு. து.ப. அழகமுத்து.
6. திரு. எல். கணேசன்.
7. திரு. வி. ஆலடி அருணா.
8. திரு. கு. திருப்பதி.
9. திரு. க. உரோ. எட்மண்ட்.
10. திரு. ச. சங்குமுத்து தேவர்.
11. திரு. ஒ. என்.சுந்தரம்.
12. திரு. கே.டி.கே. தங்கமணி.
13. திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம்.
14. திரு. கே. கந்தசாமி.
15. திரு. கே.என். குமாரசாமி
16. திரு. எம். எ. அபுசாலி.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.